284

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

**சட்டக்கற்கைகள் துறை**

**சட்ட பட்டமாணி நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் - 06**

**தொடர் மதிப்பீட்டு பரீட்சை 02 - 2022/2023**

**LLU6716– வர்த்தகச் சட்டம்**

**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**

**திகதி:- 04.12.2023** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 02.30**

---

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு (02)**

**ஒரு (01) வினாவுக்கு மாத்திரம் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்திற்கு மாணவர்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

01. தில்காரா என்ற குடும்பத்தலைவி, அவளுடைய காணியின் எல்லையாக அமைந்திருந்த அவளுடைய வீட்டின் சுவர்களில் ஒரு சுவர் அயல்வீட்டில் இருந்த காய்கறித் தோட்டம் காரணமாக எப்போதும் ஈரப்பசையுடன் இருந்தமையை கண்டறிந்தாள். அவள் "றோகண வர்ணப்பூச்சு கடை" க்கு சென்று இப்பிரச்சினையை விளக்கி ஈரப்பசையை நீக்குவதற்கு எந்த வர்ணப்பூச்சு உகந்தது என்பதையிட்டு றோகணவுடைய அறிவுரையை நாடினாள். தில்காரா றோகண சிபாரிசு செய்த வர்ணப்பூச்சை பயன்படுத்தி சுவரிற்கு வர்ணச்சாயம் பூசினாள். எனினும் ஈரப்பசை நீங்காததுடன் அவள் பயன்படுத்திய வர்ணப்பூச்சு ஈரப்பசையை போக்குகின்ற ஒன்றல்ல எனவும் சாதாரணமாக உட்சுவர்களுக்கு பயன்படுத்தும் வர்ணப்பூச்சு எனவும் தில்காரா கண்டறிந்தாள்.

அ) இல. 11, 1896ஆம் ஆண்டு பொருட்கள் விற்பனைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் தொடர்புறுத்தி மேலே தரப்பட்ட விற்பனையில் இருந்து எழுகின்ற சட்ட விளைவுகளை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

ஆ) கீழ்வரும் சூழ்நிலைகளில் மேலே தரப்பட்ட உமது விடையில் (அ) ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமா?

i. தில்காரா வர்ணப்பூச்சு தேவைப்படுகின்ற காரணத்தை குறிப்பிடவில்லை.

**(06 புள்ளிகள்)**

ii. றோகண தில்காராவிற்கு விற்பனை செய்த வர்ணப்பூச்சை காமினியிடம் இருந்து தான் அதே வீதியில் உள்ள விசாலமான "றோகண வர்ணப்பூச்சுக்கடை" இன் உரிமையாளர் என தன்னை உருவகித்து பெற்றுக்கொண்டுள்ளார்.

**(06 புள்ளிகள்)**

02. "வாடகையாளருடைய உரிமைகள் மற்றும் வாடகை கொள்வனவு உடன்படிக்கை ஒன்றின் கீழ் உள்ள உரிமையாளர் ஆகியோருக்கு இடையில் இருக்கின்ற உரிமைகள் தொடர்பான ஒரு ஒப்பீடு, வாடகை ஒப்பந்தங்கள் வாடகையாளரை விட உரிமையாளர்களுக்கு அதிக நன்மை பயக்கும் என்பதைக் காட்டுகிறது"

மேற்கூறப்பட்ட கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? (இல. 29, 1982ஆம் ஆண்டின் நுகர்வோர் கடன் சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் தீர்ப்புச் சட்டத்துடனும் தொடர்புறுத்தி உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -